R 4757 (page 42)

# சுழற்காற்றினால் எடுத்துக்கொள்ளப்படுதல்
# தீர்க்கதரிசி எலியாவின் அனுபவங்கள்
# LIFTED BY WHIRLWIND OUT OF SIGHT
# EXPERIENCES OF ELIJAH THE PROPHET

2 ராஜாக்கள் 2:1-11

"ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருக்கையில், காணப்படாமற் போனான்."
- ஆதியாகமம் 5:24

தேவன் எடுத்துக்கொண்ட, காணாமற்போன மூன்று குறிப்பிடத்தகுந்த மனிதர்களைப் பற்றி வேதாகமம் கூறுகிறது. இவர்களின் ஒருவர் ஏனோக்கு, மரிக்கவில்லை. அவர்களில் இன்னொருவர் மோசே, இவர் மரித்து அடக்கம் பண்ணப்பட்டார் என்று சொல்லப்பட்டோம். மூன்றாவது நபர் நமது பாடம் அவரைப்பற்றிதான். அவர் மரித்தாரா இல்லையா என்று சொல்லப்படவில்லை. ஆனால் நமது புரிந்து கொள்ளுதல் அவர் மரித்தார் என்பது.

சுழல் காற்றினால் எலியா எடுத்துக்கொள்ளப்பட்டது, பறவைகள் பறக்கிற வானத்துக்குத்தான். இந்த முறையில் அவர் எடுத்துக்கொள்ளப்பட்டது அவர் வாழ்க்கையில் நிழலான அம்சங்களை நிறைவேற்றவேயாகும். அதை நாம் பார்க்கப் போகிறோம். அவரோ அல்லது ஏனோக்கோ வானத்துக்கு செல்லவில்லை. அதாவது தேவனுடைய பிரசன்னத்துக்கோ, பரலோக அல்லது ஆவிக்குரிய நிலைமைக்குள் செல்லவில்லை என்பது "பரலோகத்திலிருந்து இறங்கின மனுஷ குமாரனேயல்லாமல் பரலோகத்திற்கு ஏறினவன் ஒருவனுமில்லை" என்று இயேசு அறிவித்ததின் மூலம் தெளிவாக நிரூபிக்கப்படுகிறது. (யோவான் 3:13) ஏனோக்கு மரணத்தை காணாதபடி எடுத்துக் கொள்ளப்பட்டான் என்ற அறிவிக்கப்படுகிறதோ ஒழிய, பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான் என்று சொல்லப்படவில்லை. நமது கர்த்தரின் வார்த்தைகள் அவன் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பதை உறுதிப்படுத்துகிறது. அவர் இப்போது எங்கே இருக்கிறார் என்பது யாருக்கும் தெரியாது. விசுவாசத்தினால் நாம் அதை ஏற்றும் கொள்ளலாம்.

ஏனோக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதாக சொல்லப்படுவது, ஒருவேளை நமது இனத்தை எப்பொழுதும் உயிரோடு இருக்கும்படி செய்ய முடியும் என்பதை காண்பிப்பதற்காக இருக்கலாம். பாவத்தினிமித்தமே ஆதாமும் அவனது குடும்பமும் மரிக்க வேண்டியுள்ளது. மேசியாவினால் தமது ராஜ்யத்தில் பாவமும் மரணமும் நீக்கப்படும் போது, விருப்பமும் கீழ்ப்படிதலும் உள்ள மனுக்குலத்தினர் மனித பூரணத்திற்கு கொண்டு வரப்பட்டு, மரிக்க வேண்டிய அவசியமிருக்காது. ஒரு அபூரண மனிதனாகிய ஏனோக்கு கடந்த ஐயாயிரம் வருடங்களாக தெய்வீக சக்தியால் பாதுகாக்கப்படுதல், மனுக்குலத்தின் மறு சீரமைக்கும் வேலை நடக்கும் போது, அவர்களுக்கான உதவிக்கான ஆதாரமாக இருக்கும். ஏனோக்கோ பழைய ஏற்பாட்டுக்கால விசுவாசிகளில் ஒருவராக இருக்கிறார். அவர் ஆயிர வருட யுகத்தில் மேசியாவின் கண்ணுக்கு தெரிந்த ராஜ்யத்தின் பூமிக்குரிய

ஆளுனராக பிரபுக்களில் ஒருவராக இருப்பார். "உமது பிதாக்களுக்கு பதிலாக உமது குமாரர் இருப்பார்கள். அவர்களை பூமியெங்கும் பிரபுக்களாக வைப்பீர்.' (சங்கீதம் 45:16)

## எலியா சபைக்கு ஒரு நிழல்

மெல்கிசேதேக் மகிமையில் உள்ள சபையை அடையாளப்படுத்துவது போல எலியா இயேசுவின் காலம் முதல் தற்காலம் வரை மாம்சத்தில் உள்ள சபையை, திரைக்கு இப்பக்கம் உள்ள சபையை அடையாளப்படுத்துவதை வேத மாணவர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். இப்படியாக எலியாவின் மரணத்திற்கு நீண்ட காலத்திற்கு பிறகு, தீர்க்கதரிசி மூலமாக தேவன் இஸ்ரயேலுக்கு அறிவித்தாவது: இதோ கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்கு முன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன். அவன் பிதாக்களுடைய இருதயத்தை பிள்ளைகளிடத் திற்கும், பிள்ளைகளுடைய இருதயத்தை பிதாக்களிடத்திற்கும் திருப்பாவிட்டால், பூமி சங்காரத்தால் அடிக்கப்படும், யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்கால மட்டும் உண்டாயிராத ஆபத்துக் காலம் வரும். (மல்கியா 4:5,6) மாம்சத்தில் இருந்த இயேசுவின் முன்னோடியாகிய யோவான்ஸ்நானன், மகிமையான மேசியாவின் முன்னோடியாகிய இந்த மாபெரும் எலியாவை (மாம்சத்தில் இருக்கும் சபையை) அடையாளப்படுத்தினார். யோவான்ஸ்நானன் ஜனங்களை பிதாக்களுடன் (ஆபிரகாம், ஈசாக்கு. யாக்கோபு முதலானவர்கள்) நல்லிணக்கத்திற்கு கொண்டு வர முடியாததைப் போல மாம்சத்தில் இருக்கும் சபையும், தேவன் முன்னறிந்தது போல, உலகத்திற்கு சமாதானத்தை கொண்டு வருவதில் வெற்றியடையவில்லை.

யோவான்ஸ்நானனின் இஸ்யேலுடனான தோல்வியை தொடர்ந்து, அவர்களது தேசம் கிபி 70இல் கவிழ்க்கப்பட்டது போல, அவரது உண்மைப் பொருளான மாம்சத்தில் இருக்கும் சபையானது உலகத்தை நல்லிணக்கத்தையும் நீதியையும் கொண்டு வருவதில் தோல்வியடைந்ததால் அதைத் தொடர்ந்து உலகளாவிய ஆபத்து வரும். அது மனிதனை தாழ்மைப்படுத்தி, மேசியாவின் ராஜ்யம் அதிகாரத்திலும் மகிமையிலும் இருக்கும்படி அதை ஸ்தாபிக்கும், வழியை ஏற்படுத்தும்.

## சுழற்காற்றில் அகப்படுதல்

சபைக்காக தேவன் கொடுத்திருக்கிற பரலோக இரட்சிப்புக்கும் உலகத்திற்காக தேவன் வழங்குகிற பூமிக்குரிய இளைப்பாறுதலுக்கும் (அப்போஸ்தலர் 3:19-21) உள்ள வித்தியாசத்தை மாத்திரமல்ல, இரண்டு விதமான வகுப்பார் சபையில் இருக்கிறார்கள் என்று வேதாகமத்தில் சொல்லப்பட்டிருப்பதையும் அநேக கிறிஸ்தவர்கள் கவனிக்கவில்லை. முதலாவது, கிறிஸ்து தலையாக இருக்கும் "கிறிஸ்துவின் சரீரம்" என்ற அழைக்கப்படுகிற உண்மையுள்ள ராஜரீக ஆசாரியர்கள். இவர்கள் மேசியாவின் ராஜ்யத்தில் இயேசுவுடன் சிங்காசனத்தில் உட்கார்ந்து உலகத்தை நியாயந்தீர்ப்பார்கள் என்கிற வாக்குத்தத்தத்தை பெற்றிருக்கிறார்கள். ஆவிக்குரிய தளத்தில் இரட்சிக்கப்படும் இன்னொரு வகுப்பார், "ஒருவனும் எண்ணக்கூடாத திரள் கூட்டம்" என்று வேத வாக்கியங்கள் கூறுகின்றன. (வெளிப்படுத்தல் 7:9) இவர்கள் தெய்வீக முன்னறிவினால் தீர்மானிக்கப்பட்ட தெரிந்துகொள்ளப்பட்ட ஒருஇலட்சத்து நாற்பத்தி நாலாயிரம் பேரிலிருந்து வேறுபட்டவர்கள். அவர்கள் "சிறுமந்தை," "ராஜரீக ஆசாரியர்கள்" என்று அழைக்கப்படும் போது, வேதாகமம் இந்த "திரள் கூட்டத்தாரை" மெய்யான லேவியர்கள் என்று கூறுகிறது. தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் கிறிஸ்துவுடன் சிங்காசனத்தில் உட்காரும் பொழுது இரட்சிக்கப்பட்ட இந்த இரண்டாம் தர வகுப்பார் சிங்காசனத்திற்கு

முன்பாக சேவிப்பார்கள். பரிசுத்தவான்களாகிய அந்த சிலர் மகிமையின் கிரீடங்களை அணியும் பொழுது, அவர்களது சகோதரர்களான இந்த திரள் கூட்டத்தார், கிரீடங்களை பெறாமல் சிங்காசனத்திற்கு முன்பாக வெற்றியின் குருத்தோலைகளை பெறுவார்கள். [R4757 : page 42] தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் "முதலாம் உயிர்த்தெழுதலில் கொண்டு வரப்போகிற தேவனுடைய ஆலயத்திற்கு ஜீவனுள்ள கற்களாகவும் ஆயிர வருடங்களுக்கு தேவனும் மனிதனும் சந்திக்கும் இடமாகவும் இருப்பார்கள். ஆனால் இந்த லேவியரின் வகுப்பார், "திரள் கூட்டம்" இந்த ஆலயத்தில் ஜீவனுள்ள கற்களாகவோ அல்லது தூண்களாகவோ இல்லாமல் இந்த தேவனுடைய ஆலயத்தில் இரவும் பகலும் சேவிக்கக்கூடிய மகிமையான சந்தர்ப்பத்தை பெற்று ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

"தெரிந்து கொள்ளப்பட்ட” வகுப்பாருக்கு நிழலாக எலியாவை கண்டுபிடித்த பிறகு, வேத மாணவர்கள் எலிசாவையும் ஒரு நிழலான குணசித்திரமாக கவனிக்க விரும்புகிறார்கள். மெய்யான லேவியராகிய மாபெரும் ஆவிக்குரிய வகுப்பாரின் பிரதிநிதியாகிய கவனிக்க விரும்புகிறார்கள். எலியாவின் ஊழியம் முடியும் தறுவாயில் எலிசா அவரது ஊழியனாகவும் தோழனாகவும் ஆனார். அநேக சந்தர்ப்பங்களில் எலியா, எலிசாவிடம் இங்கே இரு என்று கூறியது. இங்கே சபையின் வழிப்பாதையில் வருகிற சோதனைகளையும் கஷ்டங்களையும் ஒரு வேளை குறிப்பிடலாம். இது எலிசா வகுப்பாராகிய “திரள் கூட்டத்தார்,” எலியா வகுப்பாராகிய அதிக வைராக்கியமுள்ள அவர்களது சகோதரர்களை தொடர்ந்து செல்லக்கூடாது என்பதை குறிப்பிடலாம். இந்த பல்வேறு நிறுத்தங்களும் பரிந்துரைகளும் சலித்தல் அல்லது பிரித்தலை குறிப்பிடுகிறது. தொடர்ந்து இருக்கிற அனைவரும் எலிசா வகுப்பார் என்று புரிந்து கொள்ளப்படலாம். இரு வகுப்பாரிலும் எந்த விழுந்துபோகுதலும் இல்லை.

## அக்கினி ரதமும் குதிரை வீரரும்

எலியா ஒரு நிழலாக, இந்த விளக்கங்கள் சரியாக இருக்குமானால், மாம்சத்தில் இருக்கும் சபையின் முடிவு உடனே, திடீரென்று வரும் என்பது பாடமாக இருக்கிறது. அக்கினி ரதம் என்பது அக்கினி சோதனைகள் மற்றும் துன்பங்களையும், எலியா மற்றும் எலிசா வகுப்பார்களை பிரித்தலையும் உண்மையெனக் காட்டலாம். அடையாளமாக அல்லது நிழலாக எலியா பரலோகத்துக்கு எடுத்துச் சென்ற சுழற்காற்றானது வேத வாக்கியங்களில் ஒரே மாதிரி மாபெரும் குழப்பம் மற்றும் சண்டையை, ஒரு புயலை குறிக்கிறது. எலியா வகுப்பார் அல்லது தீர்க்கதரிசிகளின் புத்திரர் மூலமாக இந்த முடிவு முழுவதுமாக எதிர்பாராததாக இருக்காது. தீர்க்கதரிசிகளின் புத்திரரானவர்கள் வேதமாணவர்களின் மரியாதைக்குரிய வகுப்பாராக இருப்பார்கள். அவர்கள் தங்களை முழுமையாக தேவனுக்கு அர்ப்பணிக்கவில்லை. அவர்கள் எலியா அல்லது எலிசா வகுப்பாரின் பரலோக நிலைமைக்குரிய அங்கங்களாவதற்கு தகுதியுள்ளவர்களாக இருக்கமாட்டார்கள்.

-----------------------